முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 06 திகதி முதல்
சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13 திகதி வரை
(23.10.2022 ஞாயிறு முதல் 30.10.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஆறுமுகக் கடவுளின் சக்தியாக
   அவதாரம் புரிந்த அரங்கனே
   மாறுதலை கலியினில் செய்தருளும்
   மாதவராஜனே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அகத்திய மகரிஷியும்
   ஆசிபட இந்தியா தமிழகம் தன்னில்
   அறிவிப்பேன் வருங்கால பலன்குறித்த ஆசி
3. ஆசிதனை சுபகிருது துலை திங்கள்
   ஆறு திகதிமேல் முன்னான்கோர் திகதி வரை
   தேசமதில் நடக்கும் வார நிகழ்வாக
   தேசிகனார் கேட்க உரைப்பேன்
4. உரைக்கவே இந்தியா தமிழகம் தன்னில்
   ஊழலில்லா துறைகள் வளர
   கறைபடா அரசியல் மாந்தர்கள்
   களம் காணவே மாற்றம் நிகழும்
5. நிகழவே ஞானஆட்சி தரும்
   நீதிமான்களை கொண்டதொரு
   புகழ்மிக்க தலைமைகள் தன்னை
   புண்ணியவான்கள் மூலம் படைத்து
6. படைத்துமே அரங்கன் தேடலில்
   பாதுகாப்பான ஆளுமை தன்னை
   தடையற ஞானவழிக்கு வர
   தமிழகம் இந்தியா தலைநிமிரும்
7. தலைநிமிர ஞானத்தலைவனான
   தலைவன் ஆறுமுகன் வழிபாட்டினை
   பிழையற தமிழகம் இந்தியாவில்
   பேதம் கருதா செய்துவர
8. வருகவே மக்களை காக்கும்
   வல்லமையான சக்தி பரவி
   முருகப்பெருமான் வெளிப்பாடு கண்டு
   முழுமையான மக்கள் நிரம்பிய

**9.** நிரம்பிய ஞான ஆட்சியாக
நிலவுலகம் கண்டுத்தேறியே
அறம் குன்றா ஞானிகள் ஆட்சி
ஆறுமுகனார் வழிநடத்துகின்ற நல்ல

**10.** நல்லதொரு சமூகம் தேறி
ஞானசித்தர் காலமும் கனியும்
இல்லாமை என்பது கண்டிடா
இணையிலா எல்லா வரமும் காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் **06**ம் நாள் **23.10.2022** ஞாயிற்றுக் கிழமை முதல் ஐப்பசி மாதம் **13**ம் நாள் **30.10.2022** ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதாரம் புரிந்திட்ட ஆறுமுக அரங்க மகானே! கலியுகத்தில் பல அற்புதமான மாற்றங்களை செய்து கலியுகத் துன்பங்களில் இருந்து மக்களைக் காக்கின்ற மாதவராசனே ஞானதேசிகனே அரங்க மகானே! அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் **6**ம் நாள் **23.10.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் **13**ம் நாள் **30.10.2022** ஞாயிற்றுக்கிழமை வரை இந்தியா தமிழகத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஊழல் இல்லாத வகையில் எல்லா துறைகளும் வளர குற்றமற்ற அரசியல்வாதிகள் இறங்கி அரசியல் களம் கண்டால் மாற்றங்கள் உண்டாகுமப்பா ஞானம் மிக்க நீதிமான்களை கொண்டதொரு புகழ் மிக்க தலைவர்களை புண்ணியவான்களைக் கொண்டு உருவாக்கி அரங்க மகான் கூறும் தர்ம நெறியில் நின்று ஞான வழியில் ஆட்சி செய்திட ஜீவகாருண்ய வழியில் ஆட்சி புரிய இந்தியா தமிழகம் தலை நிமிர்ந்து நிற்குமப்பா.

நாடு தலை நிமிர்ந்து வர நாட்டு மக்கள் ஞானத்திற்கே தலைவனான முருகப்பெருமானை தவறாது வணங்கி பூஜை செய்து வர மத பேதம் கடந்து முருகப்பெருமானை ஏற்று வழிபாடுகள் செய்து வர வர நாடெங்கும் முருகப்பெருமானின் வல்லமையான அருள் சக்தி பரவி முருகப் பெருமானே வெளிப்பட்டு மக்களின் அறியாமை நீங்கி முழுமை அருள் பெற்ற மக்களாக மாறி நாடெங்கும் உண்மை ஞானம் பரவி ஞான ஆட்சியாக தேசம் மாறி ஞானிகள் ஆட்சி முருகப்பெருமான் தலைமையில் உண்டாகி இந்த நாட்டின் சமூகமே தேறி உலகினில் ஞான சித்தர் காலமும் கனியுமப்பா.

ஞானசித்தர் ஆட்சியிலே உலகம் இல்லாமை எனும் வறுமை ஒழிந்து எல்லாவிதமான வரங்களையும் மக்கள் பெற்று வளமுடன் அமைதியான வாழ்வினை பெறுவார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–